**செய்தி வெளியீடு எண்: 253** **நாள்:08.04.2012**

பன்றிக்காய்ச்சல் நோய் உள்ளதா என்பதை உறுதி செய்யும் ஆய்வக பரிசோதனைகளை (RT-PCR) செய்திட தமிழக அரசு 12 தனியார் ஆய்வகங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த தனியார் ஆய்வக உரிமையாளர்களுடன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.வி.எஸ்.விஜய் அவர்கள் தலைமையில் இன்று 8–4–2012 சென்னையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில், பொது மக்களின் நலன்கருதி, இலாப நோக்கமின்றி பன்றிக்காய்ச்சல் நோய் கண்டறிய தரமான ஆய்வக பரிசோதனையான RT-PCR செய்வதற்கு ரூபாய் 5000 முதல் ரூ.7000 என்று இருந்த கட்டணத்தை குறைத்து ரூ.3000 மட்டுமே ஒரே சீரான முறையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகங்கள் மக்களிடம் கட்டணமாக பெறவேண்டும் என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் வேண்டுகோள் விடப்பட்டது. இதை அங்கீகரிக்கப்பட்ட ஆய்வக உரிமையாளர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

பன்றிக்காய்ச்சல் நோய் குறித்த பரிசோதனை விவரங்களை தினமும் அரசுக்கு உடனுக்குடன் தெரிவிக்க அனைத்து அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த தனியார் ஆய்வகங்களில் மேற்கொள்ளப்படும் RT-PCR பரிசோதனை அரசின் கிங் நிலைய ஆய்வகத்தின் மூலமாக தரக்கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு சரியான ஆய்வக பரிசோதனை மேற்கொள்ள கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பொது சுகாதாரத்றை இயக்குநர் மரு.இரா.தி.பொற்கைப்பாண்டியன், மருத்துவக்கல்வி இயக்குநர் மரு.வம்சதாரா, கிண்டி கிங் நிலைய இயக்குநர் மற்றும் மருத்துவத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இயக்குநர்,பொது சுகாதாரத்துறை இயக்குநர்,
சென்னை–6.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**